DIRECTOR OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ
12 JAN 2022
CHENNAI-600 015

**சுருக்கம்**

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 2020–21ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது – பதவி உயர்வில் பணி நியமனம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை

**அரசாணை(வா) எண்.03** **நாள்: 07.01.2022**

பிலவ, மார்கழி 23,
திருவள்ளுவர் ஆண்டு 2052

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை(4ப).எண்.01, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை, நாள் 09.01.2021.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.93431/2017/ஜிஇ1.1, நாள் 31.12.2021

• • • •

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2020–21–ஆம் ஆண்டிற்கான இணை இயக்குநர் நிலை பணியிடங்களுக்கான தற்காலிக தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் 24 நபர்களுக்கு வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, 4 உதவி இயக்குநர் நிலை அலுவலர்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்களாகப் பதவி உயர்வு மற்றும் பணி நியமனம் வழங்கி அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண் | பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் இடம் | பதவி உயர்வில் வழங்கப்படும் பணியிடம் |
|---|---|---|
| 1 | திரு.பி.ஏ.சையது சுலைமான்,<br>மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),<br>விருதுநகர் மாவட்டம். | இணை இயக்குநர்,<br>தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்,<br>(Entrepreneurship Development and Innovation Institute) கிண்டி, சென்னை–32.<br>(காலிப்பணியிடம்) |
| 2 | திரு.வி.பாபு,<br>உதவி இயக்குநர் (தணிக்கை),<br>திருநெல்வேலி மாவட்டம் | இணை இயக்குநர்,<br>தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்,<br>(Tamil Nadu Rural Transformation Project), சென்னை–34.<br>(காலிப்பணியிடம்) |
| 3 | திரு.ஏ.அருணாச்சலம்,<br>உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),<br>திருநெல்வேலி மாவட்டம். | இணை இயக்குநர்<br>[(JD (Sociologist)]<br>தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை,<br>(TAWDEVA), சென்னை–32.<br>(காலிப்பணியிடம்) |

| | | |
|---|---|---|
| 4 | திரு.கே.செல்வராஜ்,<br>உதவி திட்ட அலுவலர் (வீடு மற்றும் சுகாதாரம்),<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>தஞ்சாவூர் மாவட்டம். | இணை இயக்குநர்/ Head of Division,<br>தமிழ்நாடு மாநில திட்டக் குழு, சென்னை.<br><br>(திரு.ஆர்.பாலசுப்பிரமணியன்,<br>இணை இயக்குநர் பணியேற்காததால் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம்) |

2. இணை இயக்குநர்களாக பதவி உயர்வு பெறும் உதவி இயக்குநர்களை அவர்களது பணியிடத்திலிருந்து விடுவிக்கப்படும் முன்பாக அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் அல்லது தண்டனைகள் ஏதுமில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின்னர் அவர்களை பணியிலிருந்து விடுவிக்குமாறு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர்களுக்கு அறிவுரை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. அரசாணை (நிலை) எண்.249, நிதித்(வ.செ.பொ–1) துறை, நாள் 21.05.2020–ன்படி மேற்காண் பணிநியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் இந்த பணியிட மாறுதலுக்கு பயணப்படி கோரக் கூடாது என்ற நிபந்தனையுடன் இவ்வரசாணை வெளியிடப்படுகிறது.

4. மேலே பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் பணியில் சேர்ந்த தேதி குறித்த விவரத்தினை அரசுக்குத் தெரிவிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பிங்கி ஜோவல்**
அரசு முதன்மைச் செயலாளர் (பொ)

**பெறுநர்**
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்,
**வழி**–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில திட்டக் குழு, சென்னை.
இயக்குநர், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், கிண்டி, சென்னை–32.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, (TAWDEVA), சென்னை–32.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP), சென்னை–34.
மாநில கணக்காயர், சென்னை–18/35/6.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–8/9/35.
**நகல்:**
மாண்புமிகு அமைச்சர்( ஊரக வளர்ச்சி) அவர்களின்சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக்கோப்பு/அந2/உதிரி–2

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்

மேற்குறிப்பாணை எண்.37911/2019/ஜி.இ.1.1
நாள்: 12.01.2022

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்
சென்னை–15

அரசாணை (வா) எண்.03, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை, நாள்.07.01.2022 சார்வு செய்யப்படுகிறது.

இயக்குநருக்காக

பெறுநர்:

சம்மந்தப்பட்ட அலுவலர்கள்,
(வழி– சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக)

இணை இயக்குநர்களாக பதவி உயர்வு பெறும் உதவி இயக்குநர் நிலை அலுவலர்களை பணியிலிருந்து விடுவிக்கும் முன், அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் அல்லது தண்டனைகள் ஏதுமில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின்னர், அவர்களை பணியிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகல்:

1. தலைமை செயல் அலுவலர் (CEO), தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP), கிண்டி,
சென்னை–32.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாடு முகமை (TAWDEVA), சென்னை–34.
3. உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில திட்டக் குழு, சென்னை.
4. இயக்குநர், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், கிண்டி, சென்னை–32.
5. மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள்.
6. திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள்.